# DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

## IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.

| | |
|---|---|
| Case No: | **S.C.No. 79/2023** |
| Prosecution Witness : | **LW5- PW - 5** |
| Defence Witness : | |
| Name : சைலஜா | Taluk : |
| S/o. | Age : |
| Religion : | Work : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day

**03.12.2024**

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் அரியலூர் மாவட்டம் மதனத்தூர் கிராமத்தில் வசிக்கிறேன். ஆஜர் எதிரி சங்கரை தெரியும். கடந்த 05.03.2021 அன்று மதியம் 3.00 மணியளவில் சங்கர் கலைவாணனை வெட்டியதாக சொன்னார்கள். நானும் போனேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

மேற்சொன்ன சாட்சியை பிறழ் சாட்சியாக கருத கோரி அரசு தரப்பில் வேண்டுதல் வைத்து அதன்படி அவரை பிறழ் சாட்சியாக கருதி அவரை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

தாங்கள் மதனத்தூர் கிராமத்தில் வசித்து வருவதாகவும் கடந்த 05.03.2021 ஆம் தேதி மதியம் 3.00 மணியளவில் அதே கிராமத்தை சேர்ந்த மனோகரன் என்பவர் வீட்டில் வைக்கோல் போர் போட்டுக்கொண்டிருந்த சின்னப்பா மகன் கலைவாணன் என்பவரை எங்கள் ஊரைச்சேர்ந்த ராமச்சந்திரன் மகன் சங்கர் என்பவர் குடிபோதையில் வீண்தகராறு

செய்துகொண்டிருந்ததாகவும், அப்பொழுது கலைவாணன் சங்கரை கண்டித்ததாகவும், அப்பொழுது சங்கர் கையில் வைத்திருந்த அரிவாளை எடுத்து கலைவாணனின் வலதுபக்க தலையில் வெட்டியதாகவும், மீண்டும் வெட்ட வந்தபொழுது, கலைவாணன் இடது கையால் தடுத்ததால் இடது உள்ளங்கையில் வெட்டு விழுந்ததாகவும், சத்தம் கேட்டு தாங்களும், கோவிந்தராஜ் மகன் மனோகரன் மற்றும் ரவிச்சந்திரன், புனிதா ஆகியோர் ஓடிப்போய் விலக்க சென்றதாகவும், அப்பொழுது சங்கர் அரிவாளை காட்டி இதாலேயே உன்னை கொலை செய்யாமல் விடமாட்டேன் என்று மிரட்டியதாகவும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்பொழுது ஆஜர் எதிரிக்கு பயந்து உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரி ஆஜர். குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

ஒப்பம்.திருமதி.T.மலர்வாலன்டினா,
கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி(மு.கூ.பொ.)
அரியலூர்.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.**

| | |
|---|---|
| Case No: | **S.C.No. 79/2023** |
| Prosecution Witness : | **LW6- PW- 6** |
| Defence Witness : | |
| Name : புனிதா | Taluk : |
| S/o. | Age : |
| Religion : | Work : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day

**03.12.2024**

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் அரியலூர் மாவட்டம் மதனத்தூர் கிராமத்தில் வசிக்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அசா.1 கலைவாணனை தெரியும். கடந்த 05.03.2021 அன்று மதியம் 3.00 மணிபோல் கலைவாணனை வைக்கோல்போர் போடுவதற்காக நாங்கள் கூப்பிட்டுருந்தோம். அவர் வைக்கோல் போர் போட்டுக்கொண்டிருந்தபொழுது சத்தம் கேட்டது. நான் போய் பார்த்தேன். அப்பொழுது ஆஜர் எதிரி சங்கர் கலைவாணனிடம் சண்டை போட்டுக்கொண்டிருந்தார். தகாத வார்த்தைகளால் அசா.1 ஐ எதிரி திட்டினார். நாங்கள் தடுக்க பார்த்தோம். அந்த சமயத்தில் எதிரி சங்கர் கலைவாணனை அரிவாளால் வெட்டிவிட்டார். கலைவாணன் கையால் தடுத்தபொழுது அவரது இடது கையில் வெட்டு விழுந்து காயம் ஏற்பட்டது. எல்லோரும் அங்கு வந்துவிட்டார்கள். 108 ஆம்புலன்சிற்கு போன் செய்ததால் ஆம்புலன்ஸ்காரர்கள் வந்து கலைவாணனை சிகிச்சைக்கு அழைத்து சென்றார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரிஆஜரா. குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

ஒப்பம்.திருமதி.T.மலர்வாலன்டினா,
கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி(மு.கூ.பொ.)
அரியலூர்.

## DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

## IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.

| | |
|---|---|
| Case No: | **S.C.No. 79/2023** |
| Prosecution Witness : | **LW-7 - PW - 7** |
| Defence Witness : | |
| Name : கவிதா | Taluk : |
| S/o. | Age : |
| Religion : | Work : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day

**03.12.2024**

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் அரியலூர் மாவட்டம் மதனத்தூரில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அசா.1 ஐ தெரியும். கடந்த 05.03.2021 அன்று மதியம் 3.00 மணியளவில் கலைவாணனை எதிரி சங்கர் என்பவர் வெட்டிவிட்டதாக சொன்னார்கள். பின்பு நாங்கள் சென்று ஆம்புலன்ஸ் மூலம் கலைவாணனை கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜர். குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.

**மறு விசாரணை**

இல்லை

ஒப்பம்.திருமதி.T.மலர்வாலன்டினா,
கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி(மு.கூ.பொ.)
அரியலூர்.